**திருவாளர்கள் கிருஷ்ணா மைன்ஸ், இராமையன்பட்டி கிராமம். திருநெல்வேலி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்˙ செயலில் உள்ள சுரங்கம் தொடர்பாக 18.05.2011 முற்பகல் 10.30 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை**

**முன்னிலை:-**

முனைவர் மு. ஜெயராமன். இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம்

திரு இர. விஜயபாஸ்கரன், எம்.இ. எம்.பி.ஏ
மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி

திரு சி. மோகனசுந்தரம். எம். எஸ்ஸி
துணை இயக்குநர்
சுரங்கம் மற்றும் கனிமவளத்துறை
திருநெல்வேலி

திரு எ. ராஜராஜன்
பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி

கலந்துகொண்டோர் : பட்டியல்படி

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அனைவரையும் வரவேற்று கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நோக்கம் மற்றும் நடவடிக்கை பற்றி விளக்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கிருஷ்ணா மைன்ஸ் தொழிற்சாலையின் முதன்மை சுரங்க மேலாளர் திரு ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களை திட்டம் பற்றி விளக்கக்கூறி கூட்ட நடவடிக்கைகளை துவக்கிவைத்தார். ஆதனைத் தொடர்ந்து திரு ஆர். பாலசுப்பிரமணியன் முதன்மை சுரங்க மேலாளர் சுரங்கம் அமைந்துள்ள இடம் பரப்பளவு, சுரங்க குத்தகை தொடர்பான விபரங்கள், சுரங்கம் அமைந்துள்ள இடத்தின் நில உபயோகம் வேலைவாய்ப்பு விபரங்கள் சுரங்கத்தின் நீர் பயன்பாடு கழிவு நீர் வெளியேற்று முறை சுரங்கத்தின் எதிர்கால சீரமைப்பு முறை காற்று மாசு தடுப்பு விபரங்கள் ஒலி மற்றம் அதிர்வு கட்டுப்பாடு வழிமுறைகள் பசுமை திட்டம் மற்றும் மாசு கட்டுப்பாடு தொடர்பான நிதி ஒதுக்கீடு போன்ற விபரங்களை எடுத்துரைத்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் இத்திட்டம் தொடர்பான கருத்துக்களை கூற அனைத்து பொது மக்களுக்கும் வாய்ப்பு தரப்படும் என கூறி அவர்களை தங்கள் கருத்துக்களை கூறுமாறு பொது மக்களை கேட்டுக்கொண்டார். இத்திட்டத்தை பற்றிய எதிர்ப்பு மற்றும் கருத்துக்கள் கவனமாக கேட்டு குறிக்கப்பட்டு நடவடிக்கையாக தொகுக்கப்பட்டுள்ளது.

சிலர் தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவும், சிலர் தங்களது எதிர்ப்புகளை எழுத்து வாயிலாகவும் மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பித்துள்ளனர். வுாய்மொழி அறிக்கைகள் எழுத்துபூர்வ மனுக்கள் மற்றும் தொழிற்சாலையின் பதில்கள் கீழ்வருமாறு:-

**திரு எஸ்.பி. முத்துராமன் முன்னாள் இளைஞர் காங்கிரஸ் தலைவர், திருநெல்வேலி பின்வரும் கருத்துக்களை கூறினார்.**

1. சுரங்கமானது 2009க்குபின் சுரங்க குத்தகை இல்லாமல் செயல்படுகிறது.
2. சுரங்கமானது அனுமதிக்கப்பட்ட 500 டன்னுக்கு பதில் 1500 டன் சுண்ணாம்புகல் தினந்தோறும் எடுக்கப்படுகிறது.
3. சுரங்கத்தின் செயல்பாடுகளினால் மதிகெட்டான் வாய்க்கால் அடைக்கப்பட்டுள்ளது இது சீரமைக்கப்படவேண்டும்.
4. இந்தியன் பீரோ ஆப் மைன்ஸ் விதிமுறைபடி ஐந்தாண்டு திட்டம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
5. மிகவும் ஆழத்தில் சுரங்கம் செய்யப்படுவதால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது.
6. சுரங்கத்தில் வெளிப்படும் நீரினை நிர்வாகமானது அவர்களது சொந்த விவசாயத்திற்கே பயன்படுத்திவருகிறது. இதனைத் தடுக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நீர் (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவில்லை.
7. சுரங்கம் செய்வதனால் நில நடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது.
8. அதிகமான வெடிவைப்பு, துளையிடுதல், மற்றும் சுமார் 200 லாரிகளின் இயக்கத்தினால் தூசி மாசு ஏற்படுகிறது.

9. அதிகமான துளையிடுதல், வெடிவைத்தல் மற்றும் வாகனங்களின் போக்குவரத்தினால் ஒலி மாசு ஏற்படுகிறது. வுாகனங்கள் ஓப்பந்தகாரர்கள் மூலம் இயக்கப்படுவதனால், வாகனங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை.
10. சுரங்கத்தொழிலினால் அதிகமான அதிர்வுகள் ஏற்படுகிறது.
11. ஒரே ஒரு கண் சிகிச்சை முகாம் தவிர வேறு எந்த சமூக நல திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை.
12. 95 நபர்கள் மட்டுமே வேலைவாய்ப்பு பெறுவதனால் உள்ளூர் மக்களுக்கு பெரிதாக எந்தவித பயன்பாடு ஏற்படவில்லை.
13. சுரங்கத்தின் அருகில் உள்ள புஞ்சை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.
14. சுரங்கத்தின் செயல்பாட்டினால் கால்நடை மேய்ச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.
15. ஓபவான் பல்கலைக்கழக ஆய்வறிக்கையின்படி ஓசோன்படலம் பாதிக்கப்படவாய்ப்புள்ளது.
16. மேல்மண் சீன பெருஞ்சுவர்போல் குவித்து வைக்கப்பட்டுள்ளது.

இறுதியாக அவர் மேற்படி சுண்ணாம்புகல் சுரங்கத்தை மூட உத்தரவிடும்படி கூறி முடித்தார். மேலும் மேற்கண்ட கருத்துக்களை வலியுறுத்தி எழுத்துப்பூர்வனமான மனுவையும் சமர்ப்பித்தார். மனுவின் நகல் இணைப்பு 1 ன்படி இணைக்கப்பட்டுள்ளது.

**திரு சி. சுரேஷ், சேதுராயன்புதூர், மானூர் ஒன்றிய 11வது வார்டு உறுப்பினர் கீழ் கண்ட கருத்துக்களை தெரிவித்தார்.**

1. நாஞ்சான்குளம், சேதுராயன்புதூர், மாவடி, தென்கலம், மற்றும் தாழையத்து பகுதிகள் சுரங்க தொழிலினால் வறண்டு விட்டது. விவசாயம் அழிந்து விட்டது.
2. அதிகபடியான சுண்ணாம்புகல் இந்த சுரங்கத்தில் தோண்டி எடுக்கப்படுகிறது.
3. இப்பகுதி மக்கள் விவசாயத்தை பெரிதும் சார்ந்தவர்கள். இச்சுரங்கத்தில் வெளியேறும் தண்ணீர் நிறுவனத்தின் சொந்த விவசாய நிலங்களுக்கு பயன்படுத்தப்படுவதால் பிற விவசாயிகளுக்கு எந்த பயனும் கிடைக்கவில்லை.

4. வெடிவைக்கும் பொழுது பறக்கும் கற்களால் அருகில் உள்ள பகுதிகள் பாதிக்கப்படுகின்றன. அருகில் உள்ள ஒரு தொழிற்சாலையின் கூரை பாதிப்படைந்ததை இதற்குச் சான்றாக எடுத்துரைத்தார்.
5. ஒன்றியத்தின் அனைத்து உறுப்பினர்களும் கடினமான வெடிவைத்தலுக்கு எதிராக பலகாலமாக குரல் கொடுத்து வருகின்றனர். வீடுகளில் உள்ள பாத்திரங்கள் கடின வெடிவைத்தலினால் அதிர்வதையும் தெரிவித்தார்.
6. கடின வெடிவைத்தலினால் கட்டிடங்களில் கீறல் விழுகிறது.
7. கோவில்களில் கொடை மற்றும் திருவிழாக்கள் உட்பட சமூகநலத்திட்டங்கள் எதுவும் செயலாக்கப்படவில்லை. தெரு விளக்குகள், சாலை அமைத்தல் போன்ற உள் கட்டமைப்பு வசதிகள் ஏதும் பொது நன்மைக்காக செய்யப்படவில்லை.

**திரு சி. காட்டுராஜா, 220 வடக்குத் தெரு, சேதுராயன்புதூர், கீழ்கண்ட கருத்துக்களை கூறினார்.**

1. இயற்கையாக வளர்வது தவிர பிற மரங்கள் எதுவும் வளர்க்கப்படவில்லை.
2. கடினமான வெடிவைத்தலினால் வீடுகள் சேதமடைகின்றன.
3. சுரங்கத்திலிருந்து 500 டன்னுக்கு பதிலாக 1500 டன் கல் எடுக்கப்பட்ட போதிலும் அதற்கான வரி ஏதும் ஊராட்சிக்கு செலுத்தப்படவில்லை. மேலும் பஞ்சாயத்திற்கு நிதி உதவி ஏதும் செய்யப்படவில்லை.
4. தன்னுடைய சொந்த வீட்டின் சுற்றுச் சுவர் சேதமடைந்ததையும் அவர் குறிப்பிட்டார்.
5. கம்மாளன்குளம் பள்ளிக்குச் செல்லும் பாதை அடைக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்த மக்கள் மிரட்டப்பட்டனர்.
6. பொது மக்களுக்கு எந்த ஒரு உதவியோ நலத்திட்டங்களோ செய்யப்படவிலலை. தொழிற்சாலையினால் மக்களுக்கு பாதிப்பு மட்டுமே ஏற்படுகிறது.

மேலும் அவர் எழுத்துபூர்வ மனு ஒன்றையும் சமர்ப்பித்து சுரங்ககுத்தகையை ரத்துசெய்யுமாறு தனது கருத்தை கூறி முடித்தார். அவர் மனுவின் நகல் இணைப்பு எண் 2 ஆக இணைக்கப்படுகிறது.

**திரு எஸ். அப்பாதுரை, மதவகுறிச்சி (சிறு விவசாயி) இவர் கீழ்கண்ட கருத்துக்களை முன் வைத்தார்.**

1. தன்னுடைய தோட்டத்து கிணற்றில் 30 வருடங்களுக்கு முன் போதிய நீர் இருந்தது. 200 முதல் 300 அடிவரை ஆழத்தில் சுரங்கம் செய்யப்படுவதனால் நிலத்தடி நீர் குறைந்து விட்டது. அதனால் விவசாயம் பாதிப்படைந்துள்ளது.
2. மானூர் குளத்திற்கு செல்லும் மதிகெட்டான் கால்வாய் சுரங்கம் செயல்படுவதால் அடைக்கப்பட்டுவிட்டது. இந்த வாய்க்கால் சீரமைக்கப்படவேண்டும். இந்த சுரங்க தொழிலால் விவசாயம் பாதிக்கப்படுவதால் சுரங்கம் நிறுத்தப்படவேண்டும் என்று கூறி முடித்தார்.

**திரு டி. இராஜமாணிக்கம், (AICCTU) இவர் கீழ்கண்ட கருத்துக்களை கூறினார்.**

1. சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு விதிகள் தனக்கு தெரியாது என்றும் இதன் நகலினை தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் ரூ 80 செலுத்தி பெற்றுக்கொண்டதாகவும் அதுவும் ஆங்கிலத்தில் இருந்ததாகவும் கூறினார்.
2. இந்த தொழிற்சாலை சட்டத்திற்கு புறம்பாக சுரங்கம் செய்வதின் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் வருமான இழப்பு ஏற்பட அரசாங்கம் துணை செய்வதாக குற்றம் சாட்டினார்.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியம், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தினை ரத்துசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.
4. அதிகமான வெடி வைப்பதினால் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக தெரிவித்தார்.
5. 300 மீட்டர் இடைவெளிக்குள் வீடுகள் இருக்கலாகாது என்ற சுரங்க விதிகளுக்கு மாறாக இச்சுரங்கத்தின் அருகிலேயே வீடுகள் உள்ளன.
6. கடந்த 50 வருடங்களாக கடின வெடி பொருள்கள் பயன்படுத்தப்படுவதால் மக்கள் அமைதியாக வாழ இயலவில்லை.

7. அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய ராயல்டி தொகை முறையாக செலுத்தப்படுவதில்லை ஆகையால் வருமான இழப்பீடு ஏற்படுகிறது.
8. ஓரிசா, பீகார் போன்ற பிற மாநிலங்களிலிருந்து தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். வெடிவைத்தல் மூலம் பல தொழிலாளர்கள் இறந்துள்ளனர்.
9. குழந்தை தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்
10. தொழிலாளர்களுக்கு காப்பீடு செய்யப்படவில்லை.
11. கிருஷ்ணா மைன்ஸ் தொழிற்சாலைக்கான மற்றும் 19.05.2011 அன்று நடத்தப்பட உத்தேசிக்கப்படவுள்ள சவுத் இந்தியா மைன்ஸ் அன்டு மினரல்ஸ் தொழிற்சாலைக்கான பொது மக்கள் கருத்து கேட்புனர்வு கூட்டங்கள் ரத்து செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையுடன் தனது கருத்துரையை நிறைவு செய்தார். மேலும் மேற்கண்ட கருத்துக்களை வலியுறுத்தி ஒரு மனுவையும் சமர்ப்பித்தார் மனுவின் நகல் இணைப்பு எண் 3ஆக இணைக்கப்பட்டுள்ளது.

**திரு சி. முருகேசன், சேதுராயன்புதூர்**

இவர், கிருஷ்ணா மைன்ஸ் கடந்த 40 வருடங்களாக இயங்கி வருவதாகவும் இந்த ஒரு சுரங்கம் மட்டுமே அரசாங்கத்தின் அணைத்து சட்டங்களையும், விதிகளையும் பின்பற்றி வருவதாகவும் கூறினார். மேலும் சுரங்கத்தின் 100 மீட்டர் தொலைவில் உள்ள இடங்களில் 20 அடி ஆழத்திற்குள் நிலத்தடிநீர் கிடைப்பதாகவும் தெரிவித்தார். இச்சுரங்கத்தினால் பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்று கூறி நிறைவு செய்தார்.

**திரு எஸ். மகேஷ், தாழையத்து.**

நாஞ்சான்குளம், தென்கலம், பகுதியில் உள்ள மக்கள் இச்சுரங்கத்தில் வேலை செய்வதாகவும் எனவே உள்ளுர் பொது மக்களுக்கு இத்தொழிற்சாலை வேலைவாய்ப்பு வழங்குவதாக தெரிவித்தார்.

அப்பொழுது திரு சி. காட்டுராஜா, இச்சுரங்கத்தில் பெரிய இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதாகவும், இதனால் வேலைவாய்ப்பு குறைந்து விட்டதாகவும் கூறினார். மேலும், இத்தொழிற்சாலை பஞ்சாயத்திற்கு வரி கட்டுவதில்லை எனவும் தெரிவித்தார்.

திரு டி. இராஜமாணிக்கம் இடைமறித்து சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் இத்தொழிற்சாலை மூலம் கோடிகணக்கான ரூபாய் வருமான இழப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

திரு எஸ். முருகேசன், தனது கருத்தாக இச்சுரங்கத்தின் செயல்பாடு மூலம் விவசாயம் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்தார். மேலும் இத்தொழிற்சாலை மூலம் எந்த ஒரு பொது மக்களுக்கும் உதவியோ இலாபமோ இல்லை எனவும் பாதிப்பு மட்டுமே ஏற்படுவதாகவும் எனவே உடனடியாக சுரங்கத்தை மூடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின்போது பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்து பூர்வ மனுக்களின் சாராம்சம் பின் வருமாறு:-

**அ. திரு என். இராஜாமணி, சேதுராயன் புதூர் அவர்களின் மனுவில் கீழ்கண்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது.**

1. ஆரம்பகாலங்களில் குறைந்த அளவு வெடி பொருட்கள் பயன்படுத்தப்பட்டது. பின்னர் கடினமான வெடி பொருட்கள் பயன்படுத்தப்படுவதால் கடுமையான அதிர்வுகள் வீடுகளில் உணரப்படுகின்றன. அலமாரிகளில் வைக்கப்படும் பொருட்கள் அதிர்வினால் கீழே விழுந்து உடைகின்றன.
2. பறக்கும் கற்களால் கால்நடைகளுக்கு காயங்கள் ஏற்படுகின்றன.
3. அதிகமான தூசி வெளியேற்றப்படுவதனால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுகின்றது.

சுரங்கத்திற்க்கான குத்தகை உரிமம் புதுப்பிக்கப்படுவதை எதிர்ப்பதாக கூறியுள்ளார். கடிதத்தின் நகல் இணைப்பு எண் 4 ஆக இணைக்கப்படுகிறது.

**ஆ. கம்மாளன் குளம், சேதுராயன்புதூர், பொது மக்கள் சார்பாக திரு முருகப்பப்பபாண்டி கீழ்க்காணும் விவரங்களை தெரிவித்**துள்ளார்.

1. தங்கள் பகுதிகளில் சுமார் இருநூறு பம்பு செட்டுடன் கூடிய கிணறுகள் உள்ளதாகவும் ஆழமாக சுரங்கப் பணி செய்வதால  நிலத்தடி நீர் வரத்து குறைந்துள்ளது.
2. ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருவதாகவும் சுரங்கத்தின் அருகில் மேய்ச்சல் செய்வதை சுரங்க நிறுவனம் தடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.
3. பறக்கும் கற்கள் சங்கரன்கோவில் சாலை வரை தெறிக்கின்றன.
4. ஓப்பந்தம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ள இருநூறு நபர்களின் நலனுக்காக ஆயிரக்கணக்கான கிராம மக்களும் அவர்களின் விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே தங்களுக்கு நீதி வழங்கும்படி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கோரிக்கை விடுத்து மனு நிறைவு செய்யப்பட்டது. மனுவின் நகல் இணைப்பு எண் 5 ஆக இணைக்கப்படுகிறது.

**இ. திரு எம். மாரியப்பன், வேப்பங்குளம் அவர்களின் மனு பின் வருமாறு:-**

1. கடினமான வெடிவைத்தல் மூலம் வேப்பங்குளம் கிராமம் பாதிக்கப்பட்டுள்ளது, வெடிவைக்கும்போது கிராமத்தில் அதிர்வுகள் உணரப்படுகினறது.
2. பொது மக்களுக்கு பல நோய்கள் ஏற்படுகின்றது.
3. சுற்றுச் சூழல் மாசடைகிறது.
4. சுரங்கத்தினை சுற்றியுள்ள சுமார் 25 கிராமங்கள் பாதிப்படைகின்றன.
5. விவசாய நிலங்கள் பாதிப்படைகின்றன.
6. சாலைஉபயோகிப்பவர்களும், கால் நடைகளும் பறக்கும் கற்களால் பாதிப்படைகின்றன.

மொத்தத்தில் சுரங்கத்தினை நிறுத்துமாறு கோரப்பட்டுள்ளது மனுவின் நகல் இணைப்பு எண் 6 ஆக இணைக்கப்படுகிறது.

**ஈ. திரு ஏ. எம். சாயுபானு மஸ்த்தான், உதவி தலைவர், இராமையன்பட்டி ஊராட்சி மனுவில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

1. கீழ்கண்ட சுமார் 12 கிராமங்கள் சுரங்கத்தில் வெடி வைப்பதினால் பாதிக்கப்படைகிறது - குவாரி காலனி, சேதுராயன்புதூர், கம்மாள்ன் குளம், போலீஸ காலனி, ஜெ.பி. நெல்லை பட்டினம், வேப்பங்குளம், மணி நகர், செல்வ நந்தினி நகர், சைமன் நகர், அரசு காலனி, சிவாஜி நகர், இராமையன்பட்டி, இராஜகோபாலபுரம், சங்கு முத்தம்மாள்புரம், புதுக்குளம், தண்ணீா் குளம்.

2. குறிப்பாக ஜெ.பி. நெல்லை பட்டினத்தில் சுமார் நூறு விடுகள் உள்ளன மேலும் பல வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. ஒரு பொறியியல் கல்லூரியும் அருகில் அமைந்துள்ளது. சுரங்கத்தில் வெடிவைப்பதன் மூலம் அபாயம் உள்ளது.
3. இந்த கிராமங்களில் போதிய குடிநீா் விநியோகம் இல்லை. மேலும் சுரங்கத்தின் செயல்பாட்டினால் நிலத்தடி நீரும் பாதிக்கப்பட்டுள்ளது.
4. இந்த சுரங்கம் ஏற்கனவே வெகு ஆழத்திற்கு சென்று விட்டது. மேலும் சுரங்கம் செய்தால் பொது மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படும்.
5. வெடிவைக்கும் பொழுது விபத்துக்கள் ஏற்படுகின்றன.
6. வெடிவைக்கும் பொழுது போக்குவரத்து பாதிக்கப்பட்டு இடையூறு ஏற்படுகிறது.
7. ஆயிரக்கணக்கான ஏக்கா் விவசாய நிலங்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளது

சுரங்க குத்தகை வழங்கக்கூடாது என்ற கோரிக்கையுடன் மனு நிறைவடைகிறது. மனுவின் நகல் இணைப்பு எண் 7 ஆக இணைக்கப்படுகிறது.

**உ. திரு இராமசந்திரன், ரமேஷ் கெமிக்கல்ஸ், சேதுராயன்புதூர் கீழ்கண்டவாறு தெரிவித்தார்.**

என்னுடைய தொழிற்சாலை கட்டிடத்தின் கூரை பறக்கும் கற்களால் சேதமடைந்துள்ளது. சுரங்க நிர்வாகத்திடம் முறையிட்டபின் எந்தவித நடவடிக்கையோ நிவாரனமோ தரப்படவில்லை. மாற்று நிலம் தருவதாக உறுதி அளித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் எவ்வித வருமானமும் இன்றி துன்பப்படுவதாகவும் எனவே சுரங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். மனுவின் நகல் இணைப்பு எண் 8 ஆக இணைக்கப்படுகிறது.

**ஊ. திரு பால்சாமி, தேவேந்திர குல வேளார் அமைப்பு, கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

சுரங்கமானது தரை மட்டத்திலிருந்து ஒரு கீலோமீட்டர் ஆழத்திற்கு சென்றுள்ளது. சுரங்கத்தில் வெடிவைப்பதனால் வீடுகள் பாதிப்படைவதோடு அதிர்வுகளும் உணரப்படுகின்றது. நீர் வரத்து குறைவதால் விவசாயமும் பாதிக்கப்படுகின்றது. விவசாயத்தை பாதுகாக்கும் பொருட்டு சுரங்கம் நிறுத்தப்படவேண்டும். மனுவின் நகல் இணைப்பு எண் 9 ஆக இணைக்கப்படுகிறது.

பொதுமக்கள் தெரிவித்த எதிர்ப்புகள் பதிவு செய்யப்பட்டு மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளரால் வாசிக்கப்பட்டு அவற்றிற்கு பதில் அளிக்குமாறு சுரங்க நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

**சுரங்க நிர்வாகத்தின் பதில் :-**

1. சுரங்க செயல்பாடுகள் 1958ம் ஆண்டில் தொடங்கப்பட்டன. சுரங்க குத்தகை 21.05.2009ல் முடிவுக்கு வந்ததால் குத்தகை உரிமத்தை புதுப்பிப்பதற்க்காக விண்ண்ப்பிக்கப்பட்டு தொழிற்சாலை தொடர்ந்து இயங்கி வருகிறது. (Deemed extension )

2. கிருஷ்ணா மைன்ஸ் தொழிற்சாலையானது முறையே 500 டன் மற்றும் 700 டன் சுண்ணாம்புகல் தோண்டுவதற்கு இரண்டு குத்தகை உரிமங்கள் தனித் தனியாக பெற்றுள்ளது. ஆக மொத்தத்தில் தொழிற்சாலையானது 1200 டன் சுரங்கம் செய்ய தகுதி பெற்றுள்ளது. 700 டன்னுக்கான குத்தகை உரிமம் 2013ம் வருடம் வரை நடப்பில் உள்ளது 500 டன்னுக்கான குத்தகை உரிமம் மட்டுமே நிறைவடைந்துள்ளதால் அதற்கான குத்தகை உரிமம் புதுப்பிப்பதற்காக மட்டுமே பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெறுகிறது. எனவே திரு எஸ்.பி. முத்துராமன் அவர்களின் குற்றச்சாட்டான 500 டன்னுக்கு மேல் தொழிற்சாலை சுரங்கம் செய்கிறது என்ற விவாதம் சரியானதே. ஆனால் தொழிற்சாலையானது சட்ட ரீதியாக 1200 டன் சுரங்கம் செய்ய அனுமதி பெற்றுள்ளது.
3. சுரங்கமானது Indian Bureau of Mines and Directorate of Mines Safety etc. விதிகளின் படியே செயல்பட்டு வருகிறது.
4. மதிகெட்டான் கால்வாய் அடைப்பு சம்பந்தமாக இதுவரை எந்த ஒரு புகாரும் எங்கள் நிறுவனத்தின் கவனத்திற்க்கு கொண்டுவரப்படவில்லை.
5. நிலத்தடிநீர் குறைவு சம்பந்தமாக ஒரு நிறுவனம் மூலம் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வின் முடிவு மழைகாலத்திற்கு முன்பும் மழைகாலத்திற்கு பின்பும் முறையே 8 மீட்டர் மற்றும் 15 மீட்டர் ஆழத்தில் நிலத்தடிநீர் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
6. வெடி வைப்பதனால் ஏற்படும் ஒலி மற்றும் அதிர்வு சம்பந்தமாக Director of Mines Safety, Chennai அவர்கள் வழியாக புகார் பெறப்பட்டு National Institute of Rock Mechanics, Government of India மூலம் ஆய்வுகள் செய்யப்பட்டன. ஆய்வின் முடிவு ஒலி மற்றும் நில அதிர்வுகள் அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்க்குள் இருப்பதாக தெரிவித்துள்ளது.
7. சுண்ணாம்புகல் ஏற்றிச் செல்லும் வாகன ஒப்பந்ததாரருக்கு வருடத்திற்க்கு பதினைந்து நாட்கள் பாதுகாப்பு வாகன பராமரிப்பு சம்பந்தமாக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான அறிக்கைகள் பயிற்சி மையம் மூலம் Director of Mines safety அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிறுவனம் பதில் அளிக்கும்பொழுது திரு டி. இராஜமாணிக்கம் குறுக்கிட்டு ஆய்வுகள் பொதுமக்கள் முன்னிலையில் செய்யப்படவில்லை எனவும் எனவே ஆய்வுகள் கேள்விக்குரியது எனவும் தெரிவித்தார். அதேபோல் திரு எஸ். பி. முத்துராமன் குறிக்கீட்டு முன்பு சுரங்க நிறுவனம் கிருஷ்ணா டிரான்ஸ் போர்ட் என்ற பெயரில் சொந்தமாக போக்கு வரத்து நிறுவனம் நடத்தி வந்ததாகவும் தற்பொழுது சுண்ணாம்புகல் போக்குவரத்தினை ஒப்பந்தகாரர்கள் மூலம் செய்து வருவதாகவும். ஒப்பந்தகாரர்கள் வாகனத்தை முறையாக இயக்குகிறார்கள் என்ற நிறுவனத்தின் கூற்று சரியானது அல்ல எனவும் கூறினார். மேலும் அவர்கள் குத்தகை அளவை விட அதிகமாக சுரங்கம் செய்வதாக கூறினார். மேலும் சுரங்க நிர்வாகமானது அவர்களே சொந்தமாக சுண்ணாம்பு பவுடர் தொழிற்சாலையை தொடங்கியுள்ளதாகவும், எனவே பிற சுண்ணாம்பு பவுடர் தொழிற்சாலைகளுக்கு எந்த பயனும் இல்லை என்று கூறினார்.

**மாவட்ட ஆட்சியரின் பரிந்துரைகள் :-**

1. சுரங்கமானது எந்த ஒரு ஆய்வ மேற்கொண்டாலும் அது பொது மக்கள் முன்னிலையில் நடைபெற வேண்டும்.
2. கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் ஒளிப்பதிவு நகல் விரும்பும் நபர்களுக்கு வழங்கப்படவேண்டும்.
3. IBM ன் ஐந்தாண்டு திட்டம் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையில் சேர்க்கப்படவேண்டும். மேலும் பொது மக்களுகது நேரடியாக அல்லது மறைமுக வேலைவாய்ப்பு மற்றும் அதனால் பயன்பெறும் பிற தொழிற்சாலைகள் பற்றிய விபரமும் சேர்க்கப்படவேண்டும்.
4. இத்தொழிற்சாலை மூலம் அரசாங்கத்திற்க்கு வருவாய் இழப்பு ஏற்படுவதாக பொது மக்கள் கருதினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிடலாம்.
5. குழந்தை தொழிலாளர் பற்றிய புகாரினை தொழிலாளர் துறை ஆய்வாளரிடம் முறையிடலாம்.
6. சமுதாய மேலாண்மை கடமைகள் தொடர்பாக பொது மக்களுக்கு செய்யப்படும் நலத்திட்டங்களுக்காக செலவிடப்படும் நிதி விவரங்களை தொழிற்சாலை தெரிவிக்கவேண்டும்.

7. சுரங்கத்தில் தேங்கும் நீரை இந்நிறுவனம் தங்களது விவசாய உபயோகத்திற்கு மட்டும் அல்லாமல் பிற விவசாயிகள் கேட்டாலும் வழங்கவேண்டும்

சுற்றுச் சூழல் அனுமதிக்காக விண்ணப்பிக்கும் பொழுது, பொது மக்களின் கருத்துகள் மற்றம் மேற்கண்ட பரிந்துரைகள் ஆணையத்தின் முன்பு சமா்ப்பிக்கப்படவேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவா் தெரிவித்தாா். மேற்கண்ட கருத்துக்களின் தொகுத்தலோடு கூட்டம் நிறைவடைந்தது.

**மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருநெல்வேலி**

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**திருநெல்வேலி**